## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 121/2017

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.3 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கேசவமூர்த்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சண்முகசுந்தரம் | கிராமம் | : | தண்ணீர் பந்தல் காலனி |
| வயது | : | 41 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 28-01-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

### முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் இவ்வழக்கில் 7 ம் பிரதிவாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

என்னுடைய ஆதார் அட்டையின் நகல் **பி.வா.சா.ஆ.25** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் தரப்பில் தனியாக எதிர்வாதம் எதுவும் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. தாவாச் சொத்துக்கள் க.ச.எண்.365 ல் உள்ளது. கடந்த 01.07.1923 ம் தேதியில் நஞ்சப்ப செட்டியார் மகன் மாதன் செட்டியார் தாவாச் சொத்துக்களை கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியாது. மாதன் செட்டியார் கந்தசாமி செட்டியாரின் வளர்ப்பு மகன் என்பது தொடர்பாக ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. என் தாத்தா சொல்லி கேள்விப்பட்டுள்ளேன்.

2) தாவாச் சொத்துக்களின் அசல் உரிமை மூல ஆவணங்களை நான் பார்த்தது இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தின் அசல் எதுவும் நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தில் யாராருக்கு எந்த பாகம் என்று செக்குபந்தி குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. பொதுவாகத் தான் இருப்பதாக என் தாத்தா சொல்லியிருக்கிறார். செக்குபந்தி எனக்கு சரியாக தெரியாது.

3) தாவாச் சொத்துக்கள் சரியாக இருந்திருந்தால் பதிவுக்கு கொடுக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எந்த தேதியில் பதிவு செய்ய கொடுக்கப்பட்டது என்றால் மார்ச் மாதம் 2017 ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. தாவாச் சொத்தின் செக்குபந்தி தெரியும். தாவாச் சொத்தின் தென்புறத்தில் யாருடைய சொத்து இருக்கிறது என்றால் எனக்கு மறந்துவிட்டது. மேல்புறம் யாருடைய சொத்து என்றால் சரியாக ஞாபகமில்லை.

4) கிராம நத்தம் என்றால் குடியிருப்பு பகுதியாகும். தாவாச் சொத்து பட்டா பூமி என்றால் சரிதான். பட்டா பூமி எவ்வாறு நத்தம் பூமியாக மாறியது என்று எனக்கு தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் மாதன் செட்டியாரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், நான் தவறான விவரங்களுடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.28 16:05:20 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.